சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,
சிறப்பு அமர்வு வழக்கு எண் 291/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 2(LW-3) | நாள் | 18.08.2025 |
| பெயர் | SRV நாராயணன் | தொழில் | விவசாயம் |
| தந்தை பெயர் | ராமனுஜம் | வயது | 63 |
| கிராமம் | சிதம்பரம் | தாலுக்கா | சிதம்பரம் |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)
சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் சிதம்பரம், ஞானஜோதி நகரில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அசா 1 கரிகாலன் என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இந்த வழக்கில் ஆஜராகாத எதிரிகள் மதியழகன், வேல்முருகன் ஆகியோரை தெரியாது. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் வேலை பார்த்த அசா 1 கரிகாலன் எந்த வகுப்பை சேர்ந்தவர் என்று தெரியாது. அவர் என்னிடம் தான் கொஞ்ச நாள் வேலை பார்த்தார். அவர் யார் சாதி, ஊர் பெயர் தெரியுமா என்றால் குத்தாலம் பக்கத்தில் ஒரு ஊர்.

(அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரிக்கும் இந்த சாட்சியை அரசுத் தரப்பிலேயே குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதால் பிரிவு 157 பி.எஸ்.ஏ ன்படி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

குத்தாலம் தாலுக்கா அஞ்சாறுவாத்தலை, சாலைதெருவில் வசிக்கும் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்த சாட்சி 1 கரிகாலன்என்பவர் எனக்கு சொந்தமாக திருமணஞ்சேரியில்உ ள்ள 13 ஏக்கர் நிலத்தினை கார்வாரியாக வேலை பார்த்தும், நிலத்தை பயிர் செய்து பாதுகாத்தும் வந்தார் கடந்த 30.03.2018 அன்று காலை 9.20 மணியளவில் சாட்சி 1 என் நிலத்தை பார்க்க சென்றபோது இந்த வழக்கின் எதிரிகள் அஞ்சாருவாத்தலை ரெட்டியார் வகுப்பை சேர்ந்த எதிரி 1 ரமாமணி, அஞ்சாருவாத்தலை படையாட்சி வகுப்பை சேர்ந்த 2வது எதிரி சேகர் திருவிடைமருதூர், கதிராமங்கலம்

நல்லாத்தடியை சேர்ந்த படையாட்சி வகுப்பை சேர்ந்த மதியழகன், வில்லியநல்லூர் மெயின் ரோட்டை சேர்ந்த வத்தப்பிள்ளை என்ற வேல்முருகன் ஆகியேரில் 4வது எதிரி TN82A0976 என்ற சிவப்பு கலர் மஹிந்திரா டிராக்டர் மூலம் உளுந்து பயிரை அத்து மீறி உழுது நாசம் செய்தவர்களை சாட்சி 1 ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டபோது சாட்சி 1 ஐ பார்த்து ஏன் கேக்குற பறக்கம்மனாட்டி வயல் தலைப்பில் நிக்குற ரமாமணி அம்மாவை கேளுடா குச்சிக்காரி மகனே என்று திட்டினார் என்றும் வயல் தலைப்பில் நின்று கொண்டிருந்த வழக்கின் 1, 2, 3 எதிரிகளிடம் ஓடி போய் ஏன் இப்படி பயிர்களை டிராக்டர் விட்டு உழுது நாசம் செய்கிறீர்கள் என்று கேட்டபோது சாட்சி 1 ன் சாதியை தெரிந்து எதிரி 1, ரமாமணியம்மாள் என் வயலை உழவு செய்ய நீ யாருடா பறக்குச்சிக்காரி மகனே தேவுடியா மகனே என்று திட்டினார் என்றும் பறப்பயலுக்கு என் நிலத்தில் என்னடா வேலை உனக்கு இந்த அதிகாரததை யார் கொடுத்ததுடா என்று அசிங்கமாக திட்டிக்கொண்டிருந்தபோது சாட்சி 1 எதிரி 1 ஐ பார்த்து ஏன் இப்படி திட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு அருகில் நின்றுகொண்டிருந்த 2, 3 எதிரிகள் சாட்சி 1 ஐ எங்கம்மாவை எதிர்த்து பேசுறியா பறக்குச்சிக்காரி மகனே தேவுடியா மகனே என்று திட்டினார் என்றும் இருவரும் காலால் எட்டி உதைத்தார்கள் என்றும் எதிரிகள் அனைவரும் சாட்சி 1ஐ கொலை செய்து விடுவதாக மிரட்டினார்கள் என்றும் சாட்சி 1 ன் பாதுகாப்பில் இருந்த நிலத்தில் இருந்த உளுந்து பயிர்களை சேதப்படுத்தினார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்து சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 291 /2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 3 (LW-4) | நாள் | 18.08.2025 |
| பெயர் | சுந்தர் | கிராமம் | குத்தாலம் |
| தந்தை பெயர் | சாமிதுரை | தொழில் | விவசாயம் |
| தாலுக்கா | குத்தாலம் | வயது | 52 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது குத்தாலம் குப்பையன் நகரில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்கிறேன். அசா 1 ஐ தெரியும். அசா2 ஐ தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜராகாத எதிரிகளை தெரியாது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

(அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரிக்கும் இந்த சாட்சியை அரசுத் தரப்பிலேயே குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதால் பிரிவு 157 பி.எஸ்.ஏ ன்படி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்வத்தை பற்றி எதாவது கேள்விப்பட்டீர்களா என்றால் கரிகாலன் நட்டுகிட்டிருந்த வயலில் சண்டை தகராறு என்று கேள்விப்பட்டேன்.

குத்தாலம் தாலுக்கா அஞ்சாறுவாத்தலை, சாலைதெருவில் வசிக்கும் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்த சாட்சி 1 கரிகாலன்என்பவர் அசா 3க்கு சொந்தமாக திருமணஞ்சேரியில் உள்ள 13 ஏக்கர் நிலத்தினை கார்வாரியாக வேலை பார்த்தும், நிலத்தை பயிர் செய்து பாதுகாத்தும் வந்தார் கடந்த 30.03.2018 அன்று காலை 9.20 மணியளவில் சாட்சி 1 அசா 3ன் நிலத்தை பார்க்க சென்றபோது இந்த வழக்கின் எதிரிகள் அஞ்சாறுவாத்தலை ரெட்டியார்

வகுப்பை சேர்ந்த எதிரி 1 ரமாமணி, அஞ்சாருவாத்தலை படையாட்சி வகுப்பை சேர்ந்த 2வது எதிரி சேகர் திருவிடைமருதூர், திருமணஞ்சேரி மேலத்தெருவை சேர்ந்த படையாட்சி வகுப்பை சேர்ந்த மதியழகன், வில்லியநல்லூர் மெயின் ரோட்டை சேர்ந்த வத்தப்பிள்ளை என்ற வேல்முருகன் ஆகியேரில் 4வது எதிரி TN82A0976 என்ற சிவப்பு கலர் மஹிந்திரா டிராக்டர் மூலம் உளுந்து பயிரை அத்து மீறி உழுது நாசம் செய்தவர்களை சாட்சி 1 ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டபோது சாட்சி 1 ஐ பார்த்து ஏன் கேக்குற பறக்கம்மனாட்டி வயல் தலைப்பில் நிக்குற ரமாமணி அம்மாவை கேளுடா குச்சிக்காரி மகனே என்று திட்டினார் என்றும் வயல் தலைப்பில் நின்று கொண்டிருந்த வழக்கின் 1, 2, 3 எதிரிகளிடம் ஓடி போய் ஏன் இப்படி பயிர்களை டிராக்டர் விட்டு உழுது நாசம் செய்கிறீர்கள் என்று கேட்டபோது சாட்சி 1 ன் சாதியை தெரிந்து எதிரி 1, ரமாமணியம்மாள் என் வயலை உழவு செய்ய நீ யாருடா பறக்குச்சிக்காரி மகனே தேவுடியா மகனே என்று திட்டினார் என்றும் பறப்பயலுக்கு என் நிலத்தில் என்னடா வேலை உனக்கு இந்த அதிகாரததை யார் கொடுத்ததுடா என்று அசிங்கமாக திட்டிக்கொண்டிருந்தபோது சாட்சி 1 எதிரி 1 ஐ பார்த்து ஏன் இப்படி திட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு அருகில் நின்றுகொண்டிருந்த 2, 3 எதிரிகள் சாட்சி 1 ஐ எங்கம்மாவை எதிர்த்து பேசுறியா பறக்குச்சிக்காரி மகனே தேவுடியா மகனே என்று திட்டினார் என்றும் இருவரும் காலால் எட்டி உதைத்தார்கள் என்றும் எதிரிகள் அனைவரும் சாட்சி 1ஐ கொலை செய்து விடுவதாக மிரட்டினார்கள் என்றும் சாட்சி 1 ன் பாதுகாப்பில் இருந்த நிலத்தில் இருந்த உளுந்து பயிர்களை சேதப்படுத்தினார்கள் என்று கேள்விப்பட்டதாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

## சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,
சிறப்பு அமர்வு வழக்கு எண் 291/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 4 | நாள் | 18.08.2025 |
| பெயர் | சத்தியராஜ் | கிராமம் | அகரகீரங்குடி |
| தந்தை பெயர் | செல்வராஜ் | தொழில் | மெக்கானிக் |
| தாலுக்கா | சீர்காழி | வயது | 37 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் குத்தாலத்தில் இருசக்கர வாகன மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அசா 1 கரிகாலனை தெரியும். அசா 3 ஐ தெரியும். சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது அது **அசாஆ 2** ஆகும்.

(அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரிக்கும் இந்த சாட்சியை அரசுத் தரப்பிலேயே குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதால் பிரிவு 157 பி.எஸ்.ஏ ன்படி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 20.04.2018 அன்று காலை 8.00 மணியளவில் நானும் எங்கள் ஊர் ரெட்டியார் தெருவில் வசிக்கும் பெருமாள் செட்டியார் மகன் சேகர் இருவரும் திருமணஞ்சேரி விக்ரமன் ஆற்றுக்கு வடக்கே எங்கள் ஊரில் கார்வாரியாக வேலை பார்க்கும் சிதம்பரம் SRV நாரணன் வயலுக்கு வேலைக்கு போனோம். நாங்கள போன கொஞ்ச நேரத்தில் மயிலாதுறை DSP சம்பவ இடத்திற்கு வந்து கடந்த 30.03.2018 அன்று காலை 9.30 மணிக்கு ரமாமணி என்பவர் SRV நாயணன்ள என்பவருக்கு சொந்தமான

சத்தியராஜ்

வயலில் எள், உளுந்து சாகுபடி செய்திருந்ததை டிராக்டர் மூலம் உழுது சேதப்படுத்திவிட்டதாகவும் அதை தடுக்கபோன அந்த வயலின் கார்வாரியான அசா1 கரிகாலன் என்பவரை சாதி பெயரை சொல்லி திட்டி அடித்ததாகவும் அதன்பேரில் கரிகாலன் கொடுத்த புகாரில் குத்தாலம் காவல்நிலையத்தார் குற்ற எண். 105/2018ன் கீழ் ச/பி. 294(b), 352, 506(i), இதச வின், 3(1) TNPPDL Act உ/இ 3(1)(r), 3(1)(s), 3(2)(va) SC/ST ACT 2016ன் கீழ் வழக்கு போட்டிருப்பதாகவும் இந்த வழக்கின் சம்பவ இடத்தை பார்வை யிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார் அதில் நான் முதல் சாட்சியாக கையெழுத்து போட்டு விட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு அவர்களை காப்பாற்ற பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுக்கு எடுத்து சொல்லப்பட்டு அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்வழக்குரைஞர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை